1990 ஏப்ரல் 19]

அதிலே பெரியார் மாவட்டத்திலும் இரண்டு இடங்கள் அறிவிக்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு இடங்கள்தான் என்பதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நடேசன் அவர்கள் இருக்கிறார்கள். திற்பரப்பு, பேச்சிப்பாறையில் இருந்தாலும் கூட, தொட்டிபாலத்தையும் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல், இரண்டுக்கும் மேலாக, முக்கியமான இடம் என்று நாம் கருதினால் அந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்து பரிந்துரை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடங்கள் பெரியார் மாவட்டத்தில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த இடங்கள் ? அதோடு சேர்த்து 3-வது இடமாக தலைமலைப் பகுதியையும் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை என்ற இடத்தை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இரண்டாவது இடம் பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் சேர்த்து நாம் ஆய்வு செய்யலாம்.

சுற்றுலா மையமாக்குதல்

*8053. திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், சிறுமலை, மலைக்கோட்டை, காமராஜ் நீர்த்தேக்கம், பேரணை போன்ற இடங்களை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டத்தில் சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஏராளமான இடங்கள் இருப்பதை இங்கே சுட்டிக்காட்டியுள்ளேன். குறிப்பாக சிறுமலைப் பகுதி, பேரணை நீர்த்தேக்கப் பகுதி, திண்டுக்கல் மலைக் கோட்டைப்பகுதி, காமராஜர் நீர்த்தேக்கப்பகுதி ஆகிய இடங்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்றுவருவது பழக்கத்தில் இருக்கின்றது. எனவே, இவைகளை எல்லாம் அரசு ஆய்வு செய்து ஒரிரு இடங்களையாவது சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு இடங்களை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இதற்கு மேலும் மாவட்ட சுற்றுலாத் தலம் வேண்டுமென்றால் அதையும் நாம் பரிசீலிக்கலாம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டுள்ள இந்தப் பேரணை மிக அழகான, அற்புதமான அணை. ஆனால் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள பூங்கா பராமரிப்பு ஏதும் இல்லாமல் பாழடைந்து இருக்கிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு சுற்றுலா மையங்களை ஒட்டி, இதையும் சுற்றுலா மையமாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சுற்றுலா மையமாக ஆக்கப்படுவதற்கு என்னென்ன அடிப்படை தகுதிகள் தேவை ? இயற்கை வளம் கொஞ்சுகின்ற மேகமலை போன்ற பகுதிகளை சுற்றுலா மையமாக ஆக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் அவர்களே, திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம் தனியாகப் பிரிந்த பிறகு, கொடைக்கானல் என்கின்ற கோடை வாசஸ்தலம் திண்டுக்கல் மாவட்டத்திற்கு சென்றுவிட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவருடைய மதுரை மாவட்டத்திற்கும் அப்படிப்பட்ட ஒரு சுற்றுலா மையம் இல்லையே என்கிற ஆதங்கத்தில் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

1990 ஏப்ரல் 19]

(சிரிப்பு) ஆகவே, மதுரை மாவட்டத்தில் இருக்கிற மேகமலையை கொடைக்கானல் போன்ற இடமாக ஆக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். சுற்றுலாத் துறை நிச்சயமாக அதைப் பரிசீலித்து அதற்கான காரியங்களில் ஈடுபடும்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் தமிழ்நாட்டில் சுற்றுலா மையங்கள் எந்தெந்த இடங்களில் அமைய இருக்கின்றன ? குறிப்பாக என் தொகுதியிலுள்ள சாத்தனூர் அணைக்கட்டுக்கு தினசரி பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து பார்வையிட்டு பொழுது போக்குகின்ற இடமாக அது இருப்பதால் அந்த இடத்தை சுற்றுலா மையமாக ஆரம்பிக்கிற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்புவராயர் மாவட்டம் தனியாக பிரிக்கப் பட்ட பிறகு, அந்த மாவட்டத்திற்கு இரண்டு மாவட்ட சுற்றுலா ஸ்தலங்களை ஏற்படுத்தி அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று சாத்தனூர் அணை, இரண்டு ஜவ்வாது மலை. சாத்தனூர் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கான வசதி களை மாவட்ட சுற்றுலாத் துறை செய்ய முன்வரும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணையில் இரண்டு நதிகள் ஒன்றாகக் கலக்கின்றன. அங்கு அழகான பாலம் ஒன்று இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில், 100 ஆண்டுகளுக்கு முன்பு அது கட்டப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் அங்குள்ள அனுமார் கோயிலுக்கு ஆடி மாதத்தில் வருவார்கள். பக்தர்கள் எல்லா இடங்களிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் அங்கு வந்து குழுமுவார்கள். அதற்கு முன்னுரிமை கொடுத்து சுற்றுலா மைய மாக அறிவிக்கப்படுமா? அத்துடன் மெரீனா கடற்கரையில் உள்ளதுபோல வண்ண வண்ண மீன்களை அங்கே வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தைப் பற்றி கேட்கிறார்கள் ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள என் தொகுதியிலுள்ள பேரணையைப் பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்னென்ன இருக்கின்றன என்ப தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகச் சொன் னதை நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆகவே,

அங்கே நான் வருகிறபோது, அந்த இடங்களைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்வோம்.

தன்னிறைவுத் திட்டம்.

*1571. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னிறைவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

நகர பஞ்சாயத்துக்களைச் சேர்த்தல்.

* 2246. திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்களில் நகர பஞ்சாயத்துக்களும் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990–91 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முழு அளவில் அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப் படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரில் அமல்படுத்தப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. மற்றுமுள்ள ஜவகர் வேலைவாய்ப்பு திட்டங்களோடு உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தையும் அரசு அமுல்படுத்துமா ?